# நடப்பு நிகழ்வுகள்- செப்டம்பர் 04 - 2017

- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் தரம் உயர்த்தப்பட்ட கட்டுப்பாட்டு அறை “டிஜிட்டல் ஒளிபரப்பு சேவை மற்றும் இலவச செட்-டாப் பாக்ஸ்” வழங்கும் திட்டத்தை முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமைச் செயலகத்தில் தொடங்கிவைத்தார்.
- டிஜிட்டல் ஒளிபரப்பு சேவைக்காக சென்னை நுங்கம் பாக்கத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு கேபிள் நிறுவனத்தின் கட்டுப்பாட்டு அறை ‘MPEG 2’ தொழில் நுட்பத்தில் இருந்து, ‘MPEG 4’ தொழில் நுட்பத்திற்கு மாற்றி அமைக்கப்படவுள்ளது. அரசு கேபிள் நிறுவனத்தின் சந்தாதாரர்களுக்கு செட் - டாப் பாக்ஸ்கள் விலையின்றி வழங்கப்பட்டு டிஜிட்டல் கேபிள் டிவி சேவை வழங்கப்படும்

- வடகொரியா நாடு ஹம்கியோங் மாகாணத்தில் கில்ஜு எனுமிடத்தில் (03.09.17) ஹைட்ரஜன் அணுகுண்டுப் பரிசோதனை செய்துள்ளது. சர்வதேச சமுதாயத்தின் அறிவுறுத்தல்கள் மீறிய வகையில் தொடர்ந்து 6-வது முறையாக அணு ஆயுத சோதனை நடத்தியுள்ளது.

- மத்திய அமைச்சரவை 2017 செப்டம்பர் 3 அன்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதில் பிரதமர் உள்ளிட்ட 76 அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர். இதில் இந்திரா காந்திக்கு பிறகு பாதுகாப்பு துறை பொறுப்பை ஏற்றுள்ள பெண்மணி நிர்மலா சீதாராமன் ஆவார். விளையாட்டுத் துறைக்கு முதல்முறையாக விளையாட்டுத் துறையைச் சேர்ந்த துப்பாக்கிச் சுடுதல் வீரர் ராஜ்யவர்த்தன் சிங் ராத்தோர் அமைச்சர் ஆகியுள்ளார்.

| | |
|---|---|
| பிரதமர் | 1 |
| கேபினட் அமைச்சர் | 27 |
| இணை அமைச்சர்கள் (தனிப் பொறுப்பு) | 11 |
| இணை அமைச்சர்கள் | 37 |
| மொத்தம் | 76 |

- நதிகள் மீட்போம் இயக்கம் சார்பில் தேசிய அளவிலான நதிகள் பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரப் பயணம் கோவையில் செப்டம்பர் 3-ல் தொடங்கியது. இதில் கிரிக்கெட் வீரர் சேவாக், வீராங்கனை மித்தாலிராஜ், பஞ்சாப் ஆளுநர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

- கர்நாடக மாநிலம் மாண்டியாவில் தேசிய அளவிலான 28-வது ஜுனியர் எறிபந்து சாம்பியன்ஷிப் போட்டி நடந்தது. இதில் பெண்கள் பிரிவில் கர்நாடகாவை வீழ்த்தி தமிழக அணி சாம்பியன் பட்டத்தை வென்றது. ஆண்கள் பிரிவில் தமிழக ஆண்கள் அணி வெண்கலப் பதக்கம் வென்றது.

- தமிழக வனத்துறையில் பணியாற்றி பணியின் போதே இறந்துபோன வனத்துறை அலுவலர்கள், ஊழியர்கள் நினைவாக கோவையில் நினைவுத்தூண் அமைக்கப்படுகிறது. இது வனத்துறை தியாகிகள் தினமான செப்டம்பர் 11 அன்று திறக்கப்பட பணிகள் நடைபெற்று வருகிறது.

- சர்வதேச கிரிக்கெட் போட்டியில் அதிக முறை ஆட்டமிலக்காமல் இருந்ததில் (NOT OUT) தோனி புதிய உலக சாதனையை நிகழ்த்தியுள்ளார். 73 இன்னிங்ஸ்களில் தோனி கடைசிவரை ஆட்டமிலக்காமல் களத்தில் இருந்துள்ளார்.

- ஜார்கண்ட் மாநில அரசின் ‘மத சுதந்திர மசோதா 2017’ (religious freedom bill 2017) க்கு அம்மாநில ஆளுநர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.

- அஸ்ஸாம் மாநிலத்தை ‘அமைதி பாதிக்கப்பட்ட பகுதியாக’ (disturbed area) கருதி அம்மாநிலம் முழுவதும் மேலும் ஆறு மாதங்களுக்கு AFSPA எனப்படும் “ஆயுதபடைகளுக்கான சிறப்பு அதிகாரங்கள் சட்டம் 1958” (Armed Forces (Special Powers) Act (AFSPA), 1958)–ஐ அமல்படுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1990 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 27 வருடங்களாக AFSPA சட்டம் அமலில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

- ரிசர்வ் வங்கியின் 2016-2017 ஆம் ஆண்டறிக்கையின் படி பணமதிப்பிழக்கச் செய்தல் நடவடிக்கையின் மூலம் திரும்பிப் பெறப் பட்டுள்ள மொத்த பணத்தின் மதிப்பு ரூ15.28 டிரில்லியன் என கூறப்படுகிறது.

OXFORD IAS ACADEMY